**செய்தி வெளியீடு எண்: 610** **நாள்:19.09.2019**

**<u>செய்தி வெளியீடு</u>**

இந்திய தேர்தல் ஆணையம் சிறப்பு சுருக்கமுறை திருத்தம் 2020ன் ஒரு பகுதியாக வாக்காளர் சரிபார்ப்புத் திட்டத்தினை அறிமுகப்படுத்தி செப்டம்பர் 1, 2019 முதல் 30 நாட்களுக்கு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் குறித்து, தலைமைச் செயலகத்தில் பணிபுரியும் அனைத்து துறை சார்ந்த பிரிவு அலுவலர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி, அலுவலர்கள் தங்களது விவரங்கள் மட்டுமல்லாது அவர்களது துறைகளில் பணிபுரியும் சக அலுவலர்களும் வாக்காளர் பட்டியலில் தங்களது மற்றும் குடும்ப உறுப்பினர்களின் பெயர்களையும் சரிபார்த்து பயனடைய ஏதுவாக பயிற்சி வகுப்பு தமிழக தலைமைத் தேர்தல் அலுவலர் திரு. சத்யபிரத சாகு இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் 19.09.2019 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இப்பயிற்சியில் தலைமைச் செயலகத்தின் அனைத்துத் துறைகளில் பணியாற்றும் பிரிவு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மேற்கண்ட பயிற்சி வகுப்பில் அலுவலர்களுக்கு இத்திட்டத்தினை இணைய வழி / கைபேசி, செயலி மூலமாக எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது குறித்த செயல்முறை விளக்கமும் அளிக்கப்பட்டது.

மேலும் இத்திட்டம் தொடர்பாக அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தும்விதமாக வாக்காளர் சரிபார்ப்புத் திட்டத்தின் செயல்முறை விளக்கங்களுடன் கூடிய மூன்று காணொலிகள் அடங்கிய குறுந்தகடுகளை தலைமைத் தேர்தல் அதிகாரி இன்று (19.9.2019) தலைமைச் செயலகத்தில் வெளியிட்டார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**